செ.வெ.எண் : 916/2017 நாள் : 06.12.2017

**கன்னியாகுமரி மாவட்டம்**

**ஒகி புயலில் மரணமடைந்த 8 குடும்பங்களுக்கு தலா 4 இலட்சம் வீதம் 32 இலட்சம் வழங்க உத்தரவு.**
**18 வருவாய் கிராமங்களில் பயிர் சேதங்கள் கணக்கெடுக்கும் பணி துவக்கம்**
**வருவாய்த்துறை அரசு செயலாளர் டாக்டர்.பி.சந்திரமோகன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓகி புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளை, போர்க்கால அடிப்படையில் சீரமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அனைத்துத்துறை உயர் அலுவலர்களையும் உடனடியாக கன்னியாகுமரி மாவட்டத்திற்கு அனுப்பி, நிவாரண பணிகளை வழங்க உத்தரவிட்டுள்ளார்கள். முதல்வரின் உத்தரவின்பேரில்,

வருவாய்த்துறையின் மூலம் நடைபெற்று வரும் பணிகளை துரிதப்படுத்தி வரும் வருவாய்த்துறை செயலாளர் டாக்டர். திரு. பி.சந்திரமோகன் இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கும்போது:

கன்னியாகுமரி மாவட்டத்தில் புயலால் பாதிக்கப்பட்டு சேதமடைந்துள்ள வீடுகள் குறித்த விபரங்கள் சேகரிக்கும் பணிகள் முடிவடைந்துள்ளன. இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள கணக்கீடுகளின்படி 1,687 வீடுகள் முற்றிலுமாகவும், 2,814 வீடுகள் பகுதியளவிலும் என மொத்தம் 4,501 வீடுகள் சேதமடைந்துள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. அவற்றில் முழுவதுமாக சேதமடைந்த வீடுகளில் 325 வீடுகளுக்கு தலா ரூ.5,000/- வீதம் மொத்தம் ரூ.16.25 இலட்சம் மதிப்பிலும், பகுதியளவில் சேதமடைந்த 1,002 வீடுகளுக்கு தலா ரூ.4,000/- வீதம் மொத்தம் ரூ.41.08 இலட்சம் மதிப்பில் நிவாரணத்தொகை அந்தந்த உரிமையாளர்களின் வங்கி கணக்குகளில் (இ.சி.எஸ் மூலம்) நேரடியாக வரவு வைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள உரிமையாளர்களின் வங்கி கணக்குகள் குறித்த விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. வங்கி கணக்குகள் குறித்த விவரங்கள் உறுதி செய்யப்பட்டவுடன், சம்பந்தப்பட்ட உரிமையாளருக்கு அவரவர் வங்கி கணக்குகளில் கால தாமதமின்றி இரண்டு நாட்களுக்குள் நிவாரணத்தொகை வரவு வைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அதேபோல், வருவாய் கிராமங்களில் சேதமடைந்த பயிர்களான நெற்பயிர், தென்னை, வாழை, மரவள்ளிக்கிழங்கு, ரப்பர், கிராம்பு, நல்லமிளகு, பாக்குமரம் ஆகியவற்றை கணக்கெடுக்கும் பணியானது வருவாய்த்துறை, வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறையினைச் சார்ந்த அலுவலர்கள் கொண்டு வட்டார அளவிலான குழுக்கள் அமைக்கப்பட்டு, கணக்கெடுப்பு பணிகள் இன்றிலிருந்து முழுவீச்சில் நடைபெறும். இது குறித்த சேத விபரங்கள் தினமும் மேற்படி குழுக்களிடமிருந்து பெறப்பட்டு நிவாரணம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும் ஓகி புயல் மற்றும் கனமழையின் காரணமாக பாதிக்கப்பட்ட பயிர்களுக்கான நிவாரணம் வழங்கிட ஏதுவாக, பாதிப்புக்குள்ளான விவசாயிகளின் நில உடைமை ஆவணங்களான பட்டா நகல் அல்லது நில தீர்வை ரசீது நகல், வங்கி புத்தக முதல் பக்க

நகல், ஆதார் அட்டை நகல் மற்றும் தொலைபேசி/அலைபேசி எண் போன்ற விபரங்களை தங்கள் பகுதி கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வட்டார வேளாண்மை, தோட்டக்கலை அலுவலர்களை அணுகி வழங்கிட வேண்டும்.

ஒகி புயலின் எதிரொலியாக மாவட்டத்தில் மரணமடைந்தவர்களில், அகஸ்தீஸ்வரம் வட்டம், இராஜாக்கமங்கலத்தை சாாந்த ராஜேந்திரன், த/பெ. மகாலிங்கம், வடசேரியை சார்ந்த தியாகராஜன், த/பெ. கணேசன், விளவங்கோடு வட்டம், வன்னியூர், மலையடியை சார்ந்த அலெக்சாண்டர், த/பெ. ஜான்ரோஸ், இணையம்புத்தன்துறையை சார்ந்த சூசைய்யா, த/பெ. சூசைஅடிமை, ராமன்துறையை சார்ந்த ஜெர்மான்ஸ், த/பெ. சூசை, குழித்தட்டுவிளையை சார்ந்த ரெத்தினசாமி, த/பெ. ராமசந்திரன், கல்குளம் வட்டம், மண்டைக்காடை சார்ந்த சரஸ்வதி, மாத்தூர், குமரன்குடி கிராமத்தை சார்ந்த அன்னம்மாள், க/பெ. முத்துமணி ஆகியோர் குடும்பத்தினர்களுக்கு தலா ரூ. 4 இலட்சம் வீதம் ரூ.32 இலட்சம் உதவித்தொகை அவர்களது வங்கி கணக்கில் (இசிஎஸ் முறையில்) வழங்கப்பட்டுள்ளது.

மேலும், போர்க்கால அடிப்படையில், பயிர்சேதம் கணக்கெடுக்கும் பணி மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக உதவித்தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என வருவாய்த்துறை அரசு செயலாளர் டாக்டர்.பி.சந்திரமோகன் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.